[28th January 1961

THE HON. SRI R. VENKATARAMAN : இதுபற்றி கிரைம் பிராஞ்சு மூலமாக விசாரணை செய்தோம். அந்த நோட்டு புத்தகங்களில் பார்த்தால் 200, 400 என்று போட்டிருக்கிறதே தவிர, 200 பக்கங்கள், 400 பக்கங்கள் என்று போடப்படவில்லை. ஆகையினால் அவர்கள் மீது அவர்கள் ஏமாற்றியதாகக்கூட குற்றம் சொல்ல முடியவில்லை. இருந்தும், சேம்பர் ஆப் காமர்ஸுக்கு இம்மாதிரியான நடவடிக்கை நம்முடைய வர்த்தக பண்புக்கு எதிரானது என்று எடுத்து எழுதியிருக்கிறோம். அவர்களும் அதை உடனே கவனித்து ஆவன செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுதும் அதே மாதிரி விற்பனை நடக்குமாயின் கனம் அங்கத்தினர் அதைப்பற்றி எழுதினால், மேற்கொண்டு ஏதாவது செய்ய ஏற்பாடு செய்வோம்.

Transport workers

* 232 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the number of officers and workers of the Transport department who were sent to foreign countries for training and studies during 1959–60?

THE HON. SRI R. VENKATARAMAN : None Sir.

SRI T. S. RAMASWAMI : May I know whether it is a fact that some manufacturing companies have offered to finance the training of some of our workers in foreign countries like Germany and England and if so, whether those facilities were availed of by the Department and if not, why not?

THE HON. SRI R. VENKATARAMAN : It is one of the terms of the purchase of the Leyland vehicles that if we buy about 100 vehicles, they will give training to one of our officers in the Leyland workshop and he gets training there for a period of six months. We are taking advantage of this and actually we have deputed one of our officers, Sri Sivananda, to go and undertake this training there.

Bus routes

* 202 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959-ம் ஹூ ஜூலை மீ 13உ-ல் வடாற்காடு மாவட்டம், போளூர் தாலுகா, கேளூர், துறிஞ்சிக்குப்பம், அத்திமூர், கீழ்பாலூர் பஞ்சாயத்து போர்டுகளிடமிருந்து பஸ் ரூட்களை அதிகப்படுத்த வேண்டுமென்று மகசர் வந்ததா?

(இ) அப்படியானால், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) In July 1959, the Regional Transport Authority, North Arcot, received representation from the Panchayat Board of Thurinjikuppam, Kilapalur and

Athuvambadi to provide transport facilities between Athuvambadi and Madras. No representation was received from the Panchayat Board, Athimoor.

(b) The Regional Transport Authority, North Arcot did not consider it necessary to open a new route from Athuvambadi to Madras but decided to vary the route ' Wallajah Road to Arni Road ' as ' Wallajah Road to Athuvambadi via Arni' to provide transport facilities to Athuvambadi.

SRI S. M. ANNAMALAI : சர்க்காருடைய கொள்கை 25 சதவிகிதம் பஸ்களை அதிகமாக்கவேண்டும் என்று இருந்தபோதிலும் கூட, இந்த மார்க்கத்தில் இதுவரையில் ஒரு பஸ் கூட அதிகரிக்கப் படவில்லை. அதற்குக் காரணம் என்ன ? அது குறித்து சர்க்கார் பரிசிலனை செய்தார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : ஒவ்வொரு மார்க்கத்திலும் எத்தனை பஸ்கள் தேவைப்படுகிறதோ, அதை பொது மக்களுடைய வசதிக்காக அதிகப்படுத்தவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய விருப்பம். இதையெல்லாம் தீவிரமாக பரிசீலனை செய்யவேண்டிய பொறுப்பு ஆர்.டி.ஏ.-வினுடையது. எங்கிருந்து கோரிக்கைகள் வருகின்றனவோ அவைகளையெல்லாம் முறையாக பரிசீலனை செய்து ஆர்.டி.ஏ. முடிவு எடுக்கிறார்கள். எப்பொழுதும் ஆர்.டி.ஏ. முடிவு எடுக்கும்பொழுது பொது மக்களுடைய வசதி. தேவை இவைகளை மனதில் வைத்துத்தான் முடிவு எடுக்கிறார்கள்.

SRI S. M. ANNAMALAI : இந்த மார்க்கத்திலுள்ள பொது மக்கள் மேலும் மேலும் பல மனுஜர்கள் அனுப்பியும் ஆர்.டி ஏ. இரண்டு ரூட்களுக்குத்தான் சிபார்சு செய்திருக்கிறார்கள். வாலாஜா ரோடு-ஆரணி ரோடு மார்க்கத்து பஸ்ஸை ஆத்துவம் பாடிக்கு நீடிப்பது என்பது கைவிடப்பட்டதாகத் தெரிய வருகிறது. அதற்கு உண்மையான காரணம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : வாலாஜா ரோடு-ஆரணி ரோடு பஸ்ஸை ஆத்துவம்பாடிக்கு நீடித்திருக்கிறார்கள் என்றுதான் நான் இப்பொழுது படித்த பதிலில் சொன்னேன். ஆகையால், பொது மக்களுடைய தேவையை மனதில் வைத்துத்தான் முடிவுகள் எடுக்கப்பட்டு வருகிறது.

Radio sets

* 207 Q.—**SRI V. K. KOTHANDARAMAN :** கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பஸ்களில் ரேடியோக்களை வைக்கக்கூடாதென்று சர்க்கார் உத்தரவிட்டுள்ளார்களா ?

(இ) அப்படியானால், அதற்குக் காரணமென்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes, Sir.